



# பாப்பா பாட்டில் பகவத் கீதை!

வெகு காலத்துக்குப் பிந்தையதாக வெளிப்பட்ட ஒரு படைப்பு எனலாம். ஆனால், மிக அரிய முயற்சி. பாரதி தன்னுடைய ஞான ஆசான் என்பதை இதன் மூலம் தெளிவாக மெய்ப்பிக்கிறார். தமிழில் திருக்குறளுக்கு அடுத்த படியாக, மிகுதிக்கண் ஆய்வு நோக்கில் பார்க்கப் பட்டது பாரதியினது அனைத்து படைப்புகளும் என்பர். கிட்டதட்ட 500 க்கும் மேற்பட்ட நூல்கள் வந்துள்ளன. இவற்றில் சிலவற்றின் துணைகொண்டு நூலாசிரியர் **பாப்பாபட்டை** மிகவும் நேர்த்தியாக ஆய்வு செய்துள்ளார். முதன் முதலில் "பாப்பா பாட்டு" பதிப்பிக்கப் பட்ட ஆண்டு 1915 பிப்ரவரி "ஞான பானு" இதழில் என்பதில் தொடங்கி, இரண்டு பாடல்கள் இடைச் செருகல் என்பது ஈறாக, இரண்டு பாடல்களில் பாட பேதம் ஆகியனவற்றை அழகுடன் விவரிக்கிறார். தான் எடுத்துக் கொண்டது 11 பாடல்கள் மட்டுமே என்கிறார். முதலில் பாரதி எழுதியது 14 மட்டுமே. அவற்றுள் மூன்றனுக்கு விளக்கம் தேவையில்லை. படித்தாலே புரியும் என்பது வரையில் அழகாகத் தொடர்பவர், இதனை பாரதியார் தனது மகள் சகுந்தலாவுக்காக எழுதியது என்பதனை தரவுகளுடன் விவரிக்கிறார்.

இப்படியோரு நூல் செய்யும் சிந்தை அல்லது வித்து வில்லிவாக்கத்தில், அக்னிகுஞ்சு நிகழ்ச்சியில் பங்கு பெற்ற போது, எழுந்தது என்பதுடன், இது தொடர்பான கிட்டதட்ட 70. அவற்றுள் பல மறுபதிப்பு இல்லை என்கிறார். இராஜாஜியின் 'கண்ணன் காட்டிய வழி' எனும் நூல் துணைபுரிந்தது என்பதுடன், சென்னை இலிங்கிச் செட்டித் தெருவில் இருந்த மறைமலை நூலகமே மிகவும் உதவியாக இருந்தது என்கிறார். திருமதி சகுந்தலா பாரதி, தந்தையைப் பற்றி எழுதிய நூலையும் இவர் மேற்கொள் காட்டியுள்ளார். பகவான் அருச்சுனனை ஆற்றுப் படுத்தியது போல, பாரதி, மகளை ஆற்றுப் படுத்தியுள்ளார் என்கிறார். குழந்தைகளைத்தான் ஆற்றுப்படுத்த முடியும் என எண்ணியே பாரதி குழந்தைகளுக்கு எழுதினான் பாரதி எனும் டாக்டர் பூவண்ணன் கருத்தை அழகுடன் மேற்கோளிட்டு, நிறுவுகிறார் நூலாசிரியர். அருச்சுனன் கண்ணனிடம் யாசித்தது போல்,பாப்பாவாக, சகுந்தலா யாசித்ததாக உணர்ந்ததால் பாரதி, பாப்பா பாட்டை கீதோபதேசமாகவே கண்டுள்ளான் என்கிறார்.

பாரதி ஒரு ஞானி, சித்தனும் கூட. எனவே, அவனது பதிவில், உள்ளொன்று பொதிந்து இருக்கும் என்கிறார் நூலாசிரியர். வாழ்வு என்பது போராட்டமே. அது மகா பாரதத்துக்கு நிகர். ஆதலால்தான், தெளிவுடன் உணர்ந்த பாரதி, மிகுந்த செறிவான முன்னுரையுடன் கீதைக்கு உரை கண்டுள்ளான் என்கிறார். கர்மயோகம், ஞான யோகம், பக்தியோகம் ஆகியவை எங்ஙனம் பாடல் களில் காணப்படுகின்றன என்பதை அழகுடன் விவரிக்கிறார் நூலாசிரியர்.

முதல் பாடல் முற்றிலும் கர்ம யோகமே என்கிறார். ஒவ்வொரு மனிதனும் தனக்கிடப் பட்ட செயலை, முடிக்க வேண்டும் என்பதே. சும்மா இருத்தல் அல்ல என்பதே நிலை. அருசுனனுக்கு சொல்லப்பட்டது போல பாப்பாவுக்கு பாரதி சொல்வதை விளக்கியுள்ளார். 6, 11, 12 ஆகிய மூன்று பாடல்களுக்கும் விளக்கம் தேவையில்லை. படித்தவுடன் தெற்றென விளங்குபவை என்பது நூலாசிரியர் கருத்து மட்டுமன்று உண்மையும் கூட. அடுத்து, 13, 14 ஆகிய பாடல்கள் இடைச்செருகல் என்பது, படித்தவுடன் விளங்குகிறது. பாரதி, நூலாசிரியரின் ஞான ஆசான்

எனும் நிலையில் அவனுள் ஆழ்ந்து நோக்கியதால், அவை இடைச் செருகல், முதற்பதிப்பில் இல்லை என்பதை, நிறுவுகிறார். பாடல்களின் உட்பொருள் ஏனையவற்றிற்கு கருத்தாழத்தால் முற்றிலும் தொடர்பு அற்றதாகவே தோன்றுகிறது. பாரதி அறிந்தே செய்யப்பட்டதா, பின்னாளில் செய்யப் பட்டதா எனத் தெரிய வில்லை என்கிறார். சில பாட பேதங்களையும் சுட்டுகிறார். ஐந்தாவது பாடலில், **ஊர்** என்பது **நெல்லு** என்பதாகவும், மாற்றி, **எங்கள்** எனும் சொல், 11-ம் பாடலில் முதல் வரியிலும் சேர்க்கப் பட்டுள்ளது என்பதையும், 1915-ம் ஆண்டு பதிப்பில், 13-வதாகவும், தற்போது, 15-வதாகவும் உள்ள பாடலில், முதல் வரியும் மூன்றாம் வரியும் மாற்றப் பட்டுள்ளன என்கிறார். அச்சுக்கோவை வந்த பின்பு இத்தகைய பாடபேதங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்கிறார். ஓலைசுவடியில் பதிப்பிக்கப் பட்டபோது, ஒற்றெழுத்துக்கள் தனியே எழுதுவது கிடையாது. எ எனும் இன்றைய குறில் எழுத்தில் புள்ளியிட்டால் குறில், புள்ளி இல்லை என்றால் நெடில். ஏ என்பது, இரட்டைக் கொம்பு முதலானவை, வீரமாமுனிவர் ஆகிய காண்ஸ்டைன் பெஸ்கி செய்த சீர்திருத்தம். ஆகையால், அந்நாளில், ஓலைச் சுவடியைப் படியெடுக்கும் போது, அத்தகையத் தவறுகள் நிகழ்ந்துள்ளன.

இரண்டு முதல், ஐந்து வரையிலானப் பாடல்கள் ஞான யோகம் என்கிறார். இம்மண்ணில் நம்மோடு வாழ்கிற, ஏனைய உயிரனங்களின் மீதான பார்வை, அவற்றோடு, நாம் பழகும் விதம் முதலான வற்றை விளம்புவதால், கடோபநிஷத், ஈசோபநிஷத் ஆகியவற்றின் ஸ்லோகங்கள் மூலம் கர்மயோகம் எவாறென்பதைச் சுட்டுகிறார். நூலாசிரியர். கீதையிலே கண்ணன், உயிர்களின் உள்ளே உறையும் ஆன்மா நான் என்பதைப் இப் பாடல் வரிகளின் எவ்வாறு பாரதி பதிப்பிக்கிறான் என்பதையும் விவரிக்கிறார். “எத்தித்திருடும் அந்த காக்காய், அதற்கு இரக்கப் பட வேணும்” எனும் வரிகளால் சுட்டுகிறார். ஞானயோகம் சுட்டும் உண்மையறிதல் வெளிப்பாடு, இப்பாடல்கள் தருகின்றன என்பதை அழகுடன் இவ்வாறு விளக்குகிறார்.

ஏழாவது பாடலும், ஒன்பதாவது பாடலும் யாவுமே இறைவழி என்னும் பக்தி யோகம் என்கிறார். ஆம் பாரதியும் தெய்வம் துணை என்றுதானே கூறுகிறார். புறங்கூறா நிலையே தெய்வம் அறிதல் அல்லது துணை நிற்கும் என்பதாய், குறளோடும், உபநிஷத்துக்களின் வழியிலும் பாரதியைக் காண்கிறார் நூலாசிரியர்.

போராடும் குணத்தை விவரிக்கும் எட்டாவது பத்தாவது பாடல்கள் குறித்தும் விளக்கு மிடத்து, பாரதியின் புதிய ஆத்திசூடியின் கருத்தியல்களோடு ஒப்பிடுகிறார். 13-வது பாடல், பிளவுபடாத ஆரோக்கிய சமுதாயமே குறிக்கோள் என்பதாக உள்ளது என்கிறார். இதில்தான் பாடபேதம் அதிகம் என்பதைக் கூறுகிறார். அப்பாடல்தான் தற்போதைய 15 வது பாடல்.

**சாதிகள் பெருமையில்லை பாப்பா—அதில்**
**தாழ்ச்சி யுயர்ச்சி செய்தல் பாவம்**
**நீதி தெளிந்தமதி** …….என்பது
**சாதிகள் இல்லையடி பாப்பா -குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்**
**நீதி உயர்ந்த மதி** …. என மாறியுள்ளது என்கிறார். **உயிர்களிடத்தில் அன்பு வேணும்** எனும் 14-வது பாடல், வாழும் முறைமையைக் குறிப்பது என்பதை அழகுடன், மேற்கோள்களுடன் விவரிக்கிறார். முதற்பதிப்பின், 6,11, 12 ஆகிய பாடல்கள் நீங்கலாக, ஏனைய 10 பாடல்களின் தொகுப்பே இப்பாடல் எனலாம் என்கிறார். எல்லா உயிர்களிலும் உறைந்திருப்பது ஒரே ஆன்மாதான் என்னும் கீதையின் சாரமே முதல்வரி என்கிறார். நம்மை மீறிய சக்தி உண்டு, அதுதான் தெய்வம் என்பதையும், கலங்காத திடமான, மனமாக கண்ணன் சொல்வதைத்தான் பாரதி, **வயிரமுடைய நெஞ்சு வேணும்** என்கிறான் என்கிறார்.

இவ்வாறாக, அழகுடன் ஆய்வு செய்த நூல், யாவரும் படித்துப் பார்த்து பாதுகாக்க வேண்டியது எனில் ஐயமில்லை. அன்றைய, இன்றைய, பதிப்புகளைப் பிற்சேர்க்கை யாக்கியுள்ளார். வாங்கிப் படித்து மகிழுங்கள்.